# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● டிசம்பர் 9, 2017 Weekly E-paper ● December 9, 2017


# அரசே! மீனவச் சொந்தங்களைக் காப்பாற்று!



காற்றிலும், மழையிலும் காணாமல் போயினர் நம் மீனவ உறவுகள்! கண்ணீரில் தவிக்கும் கன்னியாகுமரி மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் சொல்வதற்குக் கூட, தமிழக முதலமைச்சருக்கு நேரமில்லை. மீனவ நண்பன் எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா எடுப்பதில் மும்முரமாக இருக்கிறார். மத்திய அரசோ, அறைக்கூட்டம் போட்டு ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கிறது.

எத்தனை பேர் காணாமல் போனார்கள் என்னும் கணக்கே அரசிடம் இல்லை. அல்லது அதனைத் திட்டமிட்டு மறைக்கிறது. 97 பேர் மட்டும்தான் காணவில்லை என்று முதலில் கூறினார். இப்போது 500க்கும் மேல் என்று தமிழக அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

குமரியில் தொடங்கிய போராட்டம் இப்போது சென்னைக்கும் பரவியுள்ளது. சென்னையில் 25 கிராம மக்கள் ஒன்றுகூடிப் போராடியுள்ளனர். மீனவர்களின் தலைவர்கள், முதலமைச்சர், மீன்வளத் துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து மனு கொடுத்துள்ளனர்.

செயலற்ற இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்று தெரியவில்லை. ●

# கலவரத்தைத் தூண்டும் ஹெச்.ராஜாவைக் கைது செய்!

● சுப.வீரபாண்டியன்



தலித் மக்கள்– சிறுபான்மையினர் எழுச்சி நாளில் உரையாற்றிய எழுச்சித் தமிழர் திருமாவளவன், "ராமர் கோயிலை இடித்துத்தான் பாபர் மசூதி கட்டினார்கள், எனவே அதனை இடித்துவிட்டு நாங்கள் மீண்டும் ராமர் கோயில் கட்டுவோம் என்று மதவாதிகள் பேசுகின்றனர். அவர்கள் வாதப்படி பார்த்தால், தமிழகத்தில் பல சிவன் கோயில்களும், வைணவ கோயில்களும் சமண, பௌத்த விகாரைகளை இடித்துவிட்டுக் கட்டப்பட்டவையே. ஆதலால் அவைகளை இடித்துவிட்டு, மீண்டும் அங்கே பௌத்த விகாரைகளைக் கட்டலாமா?" என்று கேட்டுள்ளார்.

இதனைத் திரித்து, திருமாவளவன், இந்துக் கோயில்களை இடிக்க வேண்டும் என்று கூறுகிறார். அவர் "கச்சடாத்தனமாகப்" பேசுகிறார். அவரைக் கைது செய்ய வேண்டும் என்று சொல்லியுள்ளார், பாஜகவைச் சேர்ந்த ஹெச். ராஜா. டாக்டர் கிருஷ்ணசாமியைப் போலச் சமூகப் பணியாற்றாமல் (?) இப்படி நடந்து கொள்ளும் திருமாவளவனைக் கண்டிக்கிறேன் என்றும் சொல்லியுள்ளார்.

திருமாவளவன் பேச்சுக்கு ஆதரவாக வரலாற்றாசிரியர்கள் பலர் ஏற்கனவே கருத்து சொல்லியுள்ளனர். அப்படி இருக்க, அவர் பேச்சைத் திரித்து, அமைதியைக் குலைக்கும் வகையில் ஒரு கலவரத்தை ஹெச். ராஜா தூண்டி வருகின்றார். எனவே அவரை உடனே கைது செய்து, கலவரங்கள் ஏற்படாமல் தடுக்குமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறோம்! ●

திருமாவளவன் பேச்சைத் திரித்துக் கலவரத்தைத் தூண்டும்

# மதவாதிகளைக் கண்டித்துக் கண்டனப் பொதுக்கூட்டம்



| | | |
|---|---|---|
| நாள் | : | 12.12.2017 செவ்வாய் காலை 10.00 மணி |
| இடம் | : | மாம்பலம் சந்திரசேகர் மாளிகை, 34 எல்லையம்மன் கோயில் தெரு, மேற்கு மாம்பலம், (இரயில் நிலையம் அருகில்), சென்னை-33 |
| தலைமை | : | **தோழர் சுப.வீரபாண்டியன்** |
| கண்டன உரை | : | **திரு கலி.பூங்குன்றன்** துணைத் தலைவர், திராவிடர் கழகம்) |
| | | **முனைவர் அ. ராமசாமி** (மேனாள் துணைவேந்தர்) |
| | | **பேராசிரியர் அ. மார்க்ஸ்** |
| | | **தோழர் ஓவியா** (அமைப்பாளர், புதிய குரல்) |
| வரவேற்புரை | : | **தோழர் முத்தையா குமரன்** |
| முன்னிலை | : | **தோழர்கள் மு.மாறன், தமிழ்மறவன்** |
| நன்றியுரை | : | **தோழர் எட்வின்** |

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## வேடசந்தூர்



**பு**ரட்சியாளர் டாக்டர் அம்பேத்கரின் 61ஆவது நினைவு நாளை ஒட்டி, திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக மாநில அமைப்புச் செயலாளர் (பொறுப்பு) ப.புலேந்திரன், வேடசந்தூர் ரவி ஆகியோருடன் பேரவைத் தோழர்கள் அண்ணலுக்கு மாலையிட்டு மரியாதை செலுத்தினர்.

## திருவள்ளூர்



**தி**ராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக பேரறிஞர் அம்பேத்கரின் 61ஆம் நினைவு நாளை ஒட்டி அறிஞர் பெருந்தகையர் சிலைக்குத் திருவள்ளூர் மாவட்டத்தின் சார்பாக மாவட்டத் தலைவர் அம்பத்தூர் ராஜு தலைமையில் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

## அரிமா சங்கம்



**03.12.2017** அன்று ஒசூரில் நடைபெற்ற அரிமா சங்க மண்டல சந்திப்பில் கலந்துகொண்டு, ‘அறமும் அரசும்’ என்னும் தலைப்பில், தி.இ.த.பேரவையின் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் உரையாற்றினார்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்




## கையாலாகாத அரசு

**நீ**திமன்றத்தால் ஊழல் குற்றவாளி என்று தண்டிக்கபட்டு, சிறையில் அடைக்கப்பட்ட ஜெயலலிதாவை ஏதோ புனிதர் என்பதுபோலத் தூக்கிவைத்து ஆடிக்கொண்டிருக்கிறார்கள் அ.தி.மு.க.வினர். இது அவர்கள் பிரச்சனை.

100 மீட்டருக்கு ஒரு பேனர் என்று சாலைகளை ஆக்கிரமித்து பெரிய பெரிய பேனர்களையும் அலங்கார வளைவுகளையும் வைத்து மக்களின் அன்றாட வாழ்க்கையில் பேரிடைஞ்சல் செய்வது இன்றைய அரசின் வாடிக்கை. இது குறித்து உயர்நீதி மன்றம் எடப்பாடி அரசுக்குக் கண்டனம் செய்ததுடன், தடையும் விதித்தது. நீதிமன்றத்தை அவர்கள் மதிப்பதில்லை.

கோவை அரசு அச்சகத்தை இழுத்து மூடி, வடநாட்டுக்கு மோடி அரசு கொண்டுபோகிறது என்பது 6 மாதங்களுக்கு முன்னரே தமிழ் மக்களுக்குத் தெரியும்.

எல்லாம் முடிந்து அச்சகத்தை இழுத்து மூடும் நிலையில் ‘வேண்டாம்’ என்று ஒரு பயணற்ற மனுவைப் போடுகிறார் எடப்பாடி.

குமரியில், நெல்லையில் ஓகி புயல் ஆடிய பேராட்டத்தால் மக்களின் வாழ்வு நிலை குலைந்து கடுமையாகப் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது.

ஏறத்தாழ ஆயிரம் மீனவர்கள் கரை திரும்பவில்லை. புயலில் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. அந்த மக்கள் துண்டிக்கப்பட்ட புழுபோலத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசு மக்களுக்கான அரசாக இருந்திருந்தால் முதல்வர் எடப்பாடி, மீன்வளத்துறை அமைச்சர் ஜெயக்குமார் உள்ளிட்டோர் துடித்துக்கொண்டு அல்லவா அந்த மக்களிடம் போய் இருக்க வேண்டும்!

மாறாக ஆட்டுக்குத் தாடிபோல இருக்கும் ஆளுனர் பன்வாரி புரோகித், அவருடைய வேலையை விட்டுவிட்டு, மாநில வேலையில் தலையிட்டுக் கொண்டு பாதிக்கப்பட்ட மீனவர்களிடம் போனதும், அம்மீனவர்களின் கோபத்திற்கு அவர் ஆளாகித் திரும்பியதும் நாளிதழ்களில் வந்த செய்தி.

ஆனால் நம்முடைய மந்திரி பிரதானிகள் ஆர்.கே.நகர் தேர்தலுக்குள் புகுந்துக்கொண்டிருப்பதும் -

மறைந்த எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாக்களை ஆடம்பரமாக, ஆரவாரமாகக் கொண்டாடிக் கொண்டிருப்பதும் -

அதற்காகக் கோடிக்கணக்கான ரூபாய் செலவுகள், அதில் தடைசெய்யப்பட்ட பேனர்கள் வளைவுகள் என்பதில் மட்டும் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு இருந்தும் கூட, சொரணையற்று, தூசி தட்டிக்கொண்டிருக்கிறது எடப்பாடி அரசு.

இதற்குப் பெயர் மக்கள் ஆட்சியாம்!

பிரஞ்ச் நாட்டின் 17ஆம் லூயி, இரஷ்யாவின் சார் மன்னன் ஆட்சிகளைப் போல எடப்பாடியின் ஆட்சி ஒரு மக்கள் விரோத ஆட்சி.

17ஆம் லூயியின் ஆட்சி நெப்போலியன் தலைமையில் பிரஞ்ச் மக்களால் வீழ்த்தப்பட்டது. லெனின் தலைமையில் இரஷ்ய மக்களால் வீழ்த்தப்பட்டான் சார்.

உதய சூரியன் தலைமையில், தமிழக மக்களால் பா.ஜ.க.வின் பின்புல எடப்பாடியின் ஆட்சி வீழ்த்தப்பட்பட வேண்டியது கட்டாயம்.

## பேராசிரியர்

# வ.சுப.மாணிக்கனார்

● எழில்.இளங்கோவன்



**மறக்க முடியுமா?**

“மாணிக்கச் சிந்தனைகள், எளிய வாழ்வு, அளவான பேச்சு, எந்நிலையிலும் எதிர்கால நம்பிக்கை, பதவிகளைத் தொண்டாக மதித்தல், தன்னைப் பற்றிய திருத்தமான சிந்தனைகள், வாழ்க்கைத் திட்டங்கள், பெரியவர்களின் வரலாறுகளைப் படித்தல், சோர்வுக்கு இடம் கொடாத ஊக்கங்கள், பகட்டின்றித் தூய எண்ணத்தால் இறைவனை வழிபடுதல்” ஆகிய பண்புகளுக்குச் சொந்தக்காரர், பேரறிஞர் பெருந்தகை, பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார் என்று நினைவு கூர்கிறார் அவரின் மாணவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்.

தேர்ந்த சிந்தனையாளர், தெளிந்த உரையாசிரியர், திறன்மிகு உரைநடையாளர். ஆய்வாளர், பேராசிரியர், கவிஞர், பழைமை–புதுமை இரண்டையும் ஒருமித்துப் போற்றியவர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள்.

இவர் 1917ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17ஆம் நாள் புதுக்கோட்டை மாவட்டம் மேலைச்சிவபுரியில் பிறந்தார்.

தெய்வானை ஆச்சி, வ.சுப்பிரமணியன் இணையரின் ஐந்தாம் மகனாகப் பிறந்தார். இவரின் இயற்பெயர் அண்ணாமலை என்றாலும் மாணிக்கம் என்ற பெயரே நிலைபெற்று விட்டது.

தன் ஏழாம் வயது வரை நடேச (ஐயர்) ரிடம், குருகுலப் பாடம் படித்த இவர், ஏழாம் வயதில் புதுக்கோட்டை உயர்நிலைப்பள்ளியில் தன் படிப்பைத் தொடர்ந்தார்.

இவரின் 18ஆம் வயதில் பர்மாவுக்கு வேலைக்காகச் சென்றார். அங்கு வட்டிக்கடை ஒன்றில் வேலை செய்தாலும், தொடர்ந்து அங்கு நீடிக்காமல் தாயகம் திரும்பிவிட்டார்.

தமிழகம் திரும்பிய வ.சுப.மாணிக்கனாருக்கு, அறிஞர் பெருந்தகை பண்டிதமணி கதிரேசனார் அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது.

அதன் விளைவாய்த் தமிழ்மொழியின் மீது பெருநாட்டம் கொண்ட மாணிக்கனார். பண்டிதமணியின் ஊக்குவித்தலினால் சிதம்பரம் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் வித்வான் தேர்வில் தேர்ச்சி அடைந்தார்.

இப்பல்கலைக் கழகத்தில் இராகவையங்கார், ந.மு.வேங்கடசாமி நாட்டார், அ.சிதம்பரநாதன் ஆகியோர் மாணிக்கனாரின் ஆசிரியர்களாக விளங்கினர்.

1945ஆம் ஆண்டு பி.ஓ.எல் பட்டமும், 1951 ஆம் ஆண்டு எம்.ஏ. பட்டமும் பெற்றார்.

பின்னர் ‘தமிழில் வினைச் சொற்கள்’ என்ற தலைப்பில் ஆய்வு செய்து எம்.ஓ.எல் பட்டம்பெற்ற இவர், ‘தமிழில் அகத்திணைக் கொள்கை’ என்ற தலைப்பை ஆய்வுக்கு எடுத்து அதில் முனைவர் பட்டம் பெற்றார்.

1941 தொடக்கம் 1948 வரை மாணிக்கனார் பயின்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 7 ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியற்றினார். அப்பொழுது விரிவுரை பயின்ற குறிப்பிடத்தக்க இரு மாணவர்களில் ஒருவர் நாவலர் நெடுஞ்செழியன், மற்றொருவர் பேராசிரியர் க.அன்பழகன்.

1948 முதல் 1964 வரை 16 ஆண்டுகள் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார்.

1964–1970 ஆகிய 6 ஆண்டுகள் அழகப்பா கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்தார் மாணிக்கனார். அப்பொழுது அக்கல்லூரியின் மாணவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்.

பின்னர் 1970 தொடங்கி 1977 வரை 7 ஆண்டுகள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய போது, இந்திய மொழிப்புல முதன்மையாளர் பொறுப்பில் இருந்து பணியாற்றி இருக்கிறார்.

1979 முதல் 1982 வரை மூன்று ஆண்டுகள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பொறுப்பேற்றுத் திறம்படப் பணியாற்றினார்.

இங்கு தமிழ்மொழியின் வளர்ச்சி மற்றும் அறிவியல் துறை வளர்ச்சிக்கான இவரின் பணியை அப்போதைய தமிழக அரசு பெரிதும் பாராட்டியுள்ளது.

பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்ற வ.சுப. மாணிக்கனார், கேரள மாநிலம் திருவனந்தபுரம் கல்லூரியில் திராவிட மொழியியல் கழகத்தின் முதுபேராய்வளாளராக இருந்து சிறப்பு வாய்ந்த இருநூல்களை ஆங்கிலத்தில் எழுதினார்.

அவ்விரு நூல்களுள் ஒன்று ‘தமிழ் யாப்பில் வரலாறும் வளர்ச்சியும். மற்றொன்று தொல்காப்பிய ஆய்வு!’

பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் பல்வேறு நூல்கள் எழுதி இருக்கிறார். அவற்றுள் குறிப்பிடத்தக்க சில நூல்கள் வருமாறு:

எழுத்துச் சீர்திருத்தம் எங்கே போகிறது, தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன்மரபும், மொழி மரபும், தொல்காப்பியப் புதுமை, தொல்காப்பியத் திறன், தொல்காப்பியக் கடல், வள்ளுவம், ஒப்பியல் நோக்கு, திருக்குறள் சுடர், திருக்குறள் தெளிவுரை (மாணிக்கவுரை).

இம்மட்டுமன்று The Tamil Concept of Love - A Study of Tamil verbs - Collected Papers, Tamilology போன்ற ஆங்கில, நூல்களும் இவரால் எழுதப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இவரின் நூல்கள் 2006 ஆம் ஆண்டில் நாட்டுடைமை ஆக்கப்பட்டன.

பேராசிரியர் மாணிக்கனார் அவர்கள் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.

தமிழகப் புலவர்குழுத் தலைவராக இருந்துள்ளார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வடிவமைப்புக் குழுத் தலைவராகவும் இருந்து இவைகளின் மூலம் தமிழுக்குப் பெரும் தொண்டு ஆற்றியிருக்கின்றார்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவரின் தமிழ்ப்பணிக்காக இவருக்கு டி.லிட் (சிறப்பு முனைவர்) பட்டம் வழங்கி உள்ளது.

‘முதுபெரும் புலவர்’ எனற விருதை குன்றக்குடி அடிகளார் வழங்கி இருக்கிறார்.

இவரின் சொந்த ஊரான மேலைச்சிவபுரியில் இயங்கி வந்த சன்மார்க்க சபை இவருக்குத் ‘தமிழச் செம்மல்’ என்ற சிறப்பு விருதை வழங்கி இருக்கிறது.

தமிழ்நாடு அரசு பேராசிரியர் வ.சுப. மாணிக்கனார் மறைவிற்குப் பின்னர், இவரைப் போற்றும் விதமாக இவருக்குத் ‘திருவள்ளுவர்’ விருதை வழங்கி சிறப்பித்து இருக்கிறது.

இவரின் மறைவுக்குப் பின்னர், இவர் எழுதிவைத்த உயிலின்படி, சொந்த ஊரான மேலைச் சிவபுரி அறக்கட்டளைக்கு ஒருகுறிப்பிட்ட தொகை இவரின் சொந்தப்பணத்தில் இருந்து கொடுக்கப்பட்டு உள்ளது.

அதுபோல மேலைச்சிவபுரியில் சாதி மதவேறுபாடு இன்றி எல்லாக் குழந்தைகளின் உடல்நலம் பேண மருத்துவ உதவிக்காகவும் இவரின் பணத்தில் ஒரு தொகை வழங்கப்பட்டு உள்ளது.

இதே வழியில் சாதி மத வேறுபாடு இன்றி குழந்தைகளின் கல்விக்காக உதவும் பொருட்டும் கணிசமான தொகை ஒதுக்கித் தரப்பட்டுள்ளது.

இவரால் சேர்ந்து வைக்கப்பட்டிருந்த 4500 நூல்களைத் தான் பணியாற்றிய காரைக்குடி அழகப்பா கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கிவிட்டார்.

தன் ஆசிரியர் பண்டிதமணி கதிரேசனாரின் நூற்றாண்டு விழாவை அரசு விழாவாக ஆக்கியவர். மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் மூலம் பண்டிதமணியின் நூல்களைப் பதிப்பித்தவர். பண்டித மணியின் சொந்த ஊரான மதிபாலன் பட்டியில் அவருக்குச் சிலை அமைத்த அவரின் மாணவர் – தமிழுலகப் பேரறிஞர் பேராசிரியர் வ.சுப. மாணிக்கனார் 1989ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் நாள், புதுவையில் இரவு 11 மணிக்கு மாரடைப்பால் காலமானார். ●

# திராவிட இயக்கத் தமிழர் பேரவை

**மகளிர் அணி சார்பில்**

**கருத்தரங்கம்**

**"இன்றைய அரசியல் - அறிவியல் - பெண்கள்"**

நாள்: 10.12.2017 ஞாயிறு மாலை 06.30 மணி

இடம் : மாண்ட்போர்ட் மெட்ரிகுலேஷன் பள்ளி, படேல் சாலை, பெரம்பூர், சென்னை

• வரவேற்புரை •

**தோழர் நித்யா**

• தலைமை •

**தோழர் மகாலட்சுமி**

(மாநில மகளிர் அணிச் செயலாளர்)

• முன்னிலை •

**தோழர்கள் மு.மாறன், முத்தையா குமரன், தமிழ்மறவன், எட்வின், மகேஸ்வரி, தென்றல், சபானா, ஸ்ரீவித்யா**

• கருத்துரை •

**தோழர் சுப. வீரபாண்டியன்**

**திரு வசந்தி ஸ்டான்லி**

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

• நன்றியுரை •

**தோழர் ஜனனி**

• தொகுப்புரை •

**தோழர் மணிகண்டன்**

அனைவரும் வருக!

## பேரவைப் பொறுப்பாளர்கள் நியமனம்


மதுரை புறநகர் மாவட்டத் திராவிட இயககத் தமிழர் பேரவையின் இலக்கிய அணித் தலைவராக தோழர் போடி பா.காமராசு, இலக்கிய அணிச் செயலாளராக மா.கருப்பையா ஆகியோர் பொதுச் செயலாளரால் நியமிக்கப் பட்டுள்ளார்கள். பணி தொடர வாழ்த்துகள்.

**- ப.புலேந்திரன்**

அமைப்புச் செயலாளர் (பொறுப்பு)

### சேகர் ரெட்டியின் டைரி

# ஊழல் தலைவிரித்தாடும் தமிழகம்




**தி.மு.கழக செயல் தலைவரும் சட்டப் பேரவை எதிர் கட்சித் தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் 8.12.2017 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்...**



நான் தொடக்கத்திலிருந்தே மணல் மாஃபியா சேகர் ரெட்டி கும்பலுடன் ஓ.பன்னீர்செல்வம் எந்த அளவுக்குத் தொடர்பு வைத்திருக்கிறார் என்பதைப் பல முறை சுட்டிக் காட்டியிருக்கிறேன். மணல் மாஃபியா சேகர் ரெட்டியின் வீட்டில் வருமான வரித்துறைச் சோதனை நடந்தபோது பறிமுதல் செய்யப்பட்ட டைரியில் ஓ.பி.எஸ் மற்றும் குட்கா புகழ் விஜய பாஸ்கர் உள்ளிட்ட 8 அமைச்சர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்ட ஆதரங்களோடு தெரியவந்தது.

இதுகுறித்து முறையான விசாரணை நடத்த வேண்டும் என்றும், குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் உடனடியாகத் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்ய வேண்டும் என்றும், அவர்கள் மீது மேதகு ஆளுநர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தி.மு.க. சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அதுமட்டும் அல்ல முழுமையான உண்மைகள் வெளிப்பட வேண்டும் என்றால் சி.பி.ஐ. விசாரனைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் தி.மு.க. கோரியுள்ளது.

...இந்த ஆட்சியை அகற்ற வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாக உள்ளது. இந்த அரசு ஒரு குதிரை பேர அரசாக நடந்துகொண்டு இருக்கிறது. இதற்கு முன் பொறுப்பில் இருந்த கவர்னரிடம் இது குறித்து ஏற்கனவே மனு அளித்தும், இப்போது புதிய ஆளுநர் பொறுப்புக்கு வந்திருக்கிறார். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காததால்தான் நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம். நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

'குதிரை பேர' அ.தி.மு.க. அரசில் பல்வேறு ஊழல்கள் நடைபெறுவதாகப் பல முறை நாங்கள் கூறிவந்தோம்.

அதனை உறுதி படுத்தும் வகையில் 'தி வீக்' மற்றும் 'டைம்ஸ் நவ்' தொலைக்காட்சி ஆகியவற்றில் செய்திகள் வருகின்றன. அதன் அடிப்படையில் சி.பி.ஐ. விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கையாக உள்ளது.

தேவைப்பட்டால் புதிய கவர்னரை சந்திக்க வேண்டிய சூழல் வரும்.

– இவ்வாறு கூறியிருக்கிறார்.

## தோழர் சுப.வீரபாண்டின் சுற்றுப் பணயம்

| | |
|---|---|
| டிசம்பர் 9 | மாலை - ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் பரப்புரை |
| டிசம்பர் 10 | காலை - பேரவை அலுவலகம் - தலைமைக் குழுக் கூட்டம். |
| டிசம்பர் 10 | மாலை - பெரம்பூர் - பேரவை மகளிர் அணிக் கூட்டம் |
| டிசம்பர் 11 | மாலை - தண்டையார்பேட்டை - ஆர்.கே.நகர் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் |
| டிசம்பர் 12 | காலை - மேற்கு மாம்பலம் - கண்டனக் கூட்டம் |
| டிசம்பர் 14 | காலை - வடக்குப் பாளையம் (கரூர்) - சுயமரியாதைத் திருமணம் |
| டிசம்பர் 15 | காலை - மதுரை – குருத்துவக் கல்லூரி மாணவர் மன்றக் கூட்டம் |
| டிசம்பர் 16 | காலை - உடுமலை - ஜி.வி.ஜி கல்லூரி விழா |

| | |
|---|---|
| டிசம்பர் 17 | காலை - ஆலந்தூர் - ஓய்வூதிய சங்கக் கூட்டம் |
| டிசம்பர் 17 | மாலை - செங்கல்பட்டு - திருக்குறள் விழா |
| டிசம்பர் 18 | மாலை - ஆர்.கே.நகர் - வாக்கு சேகரிப்பு |
| டிசம்பர் 22 | மாலை - சென்னை – குமரி தமிழரசன் நூல் வெளியீட்டு விழா |
| டிசம்பர் 23 | மாலை - சென்னை - தமிழ்மகன் நூல் வெளியீட்டு விழா |
| டிசம்பர் 24 | காலை - சென்னை - மாநில சுயாட்சி நூல் வெளியீட்டு விழா |
| டிசம்பர் 25 | மாலை - இராமாபுரம் - திருமண வரவேற்பு |
| டிசம்பர் 30 | முழுநாள் - தேனி - புதியகுரல் ஒன்று கூடல் நிகழ்வு. |

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.